முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1239

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.02.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வேலி கொண்ட அரங்கனே
   ஞானிகளை படைக்க வந்த தேசிகனே
   வானவர்கள் துணைபடவே வையகத்தைகாக்க
   வள்ளலாக தர்மம் வழங்குகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   வரமென ஞான அறிவுரை ஆசி வழங்குவேன் அரங்கன் பலம் உலகமறிய
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 07 ம் நாள், 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை)
   அறியவே அரங்கன் திருவடி பற்றி
   அனுதினம் உலகோர் ஞானிகள் பூஜைசெய்ய
3. வரமென ஆறுமுகன் யான் இறங்கி வல்லமை கூட்டுவேன்
   வையகமெங்கும் என் பூஜை வழிபாடு சிறக்க
   அறமென அரங்கனை கொண்டே
   உலகத்தில் அற்புதம் நடத்துவேன்
4. அன்னதனால் உலகோர் அரங்கன் பிரணவக்குடில் நாடி
   அருளமுது உண்டு ஞான தீட்சை ஏற்று
   வரமென ஞானவழி தொடரவே
   வையகத்தில் ஞான ஆட்சி உருவாக்குவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–